# அனைவருக்கும் கல்வி இயக்கம் , சேலம் மாவட்டம்

## 1. SABL / ALM

### எளிமைப்படுத்தப்பட்ட செயல்வழிக் கற்றல் (SABL)

*1முதல் 4ம் வகுப்பு வரை எளிமைப்படுத்தப்பட்ட செயல்வழிக் கற்றல்முறையில் பள்ளிகளுக்கு 1946 கற்றல் அட்டைகள் 1688 கணித உபகரணப் பெட்டிகள், 381 அறிவியல் உபகரண பெட்டிகள் 725 அறிவியல் குறுந்தகடுகள், 4554 புத்தக பூங்கொத்து கதைப் புத்தகங்கள் வழங்கப்பட்டு மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.*

### செயல்திட்ட வழிக் கற்றல் (ALM)

*ஒவ்வொரு ஒன்றியத்தில் இருந்தும் 6 ஆசிரியர்கள் வீதம் பயிற்சி வழங்கப்பட்டு, பள்ளியில் வகுப்பறை செயல்பாடுகள் மற்றும் மாணவர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளை எடுத்துக் கொண்டு அதற்கான தீர்வுகளை செயல் திட்டமாக மாணவர்கள் மற்றும் பயிற்சி ஆசிரியர்கள் தயார் செய்கின்றனர். சிறந்த செயல் திட்டத்திற்கான பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.*

## 2. பள்ளி வசதி– புவியியல் தகவல் வரைபட முறைமை (Access)

குழந்தைகளுக்கான இலவச மற்றும் அடிப்படைக் கல்வி உரிமை விதிகள் 2011–இல் குடியிருப்பிலிருந்து 1 கிமீ தொலைவிற்குள் தொடக்கப்பள்ளிகள் நிறுவிடவும் 3 கி.மீ தொலைவிற்குள் நடுநிலைப்பள்ளிகளை நிறுவிடவும் வரையறுக்கப்பட்டுள்ளது. இதை உறுதி செய்யும் வகையில் ஒர் அறிவியல் பூர்வமான புவியியல் தகவல் வரைபட முறைமை (GIS) உருவாக்கப்பட்டுள்ளது நிர்வாகம் மற்றும் பொதுப்பயன்பாட்டிற்கு ஏதுவாக இணைய தள வழியில் பயன்படுத்தும் வண்ணம் இவ்வரைபட முறைமை உருவாக்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளையும், குடியிருப்புகளையும் உள்ளடக்கிப் புவியியல் தகவல் வரைபட முறைமை (GIS) உருவாக்கப்பட்டுள்ளது பள்ளி வசதி இல்லா குடியிருப்புகளுக்குப் போக்குவரத்து பாதுகாவலர் மற்றும் உண்டு உறைவிடப் பள்ளி போன்ற பள்ளி வசதிகளை வழங்கவும் அதனை உறுதி செய்யவும் இது பயன்படுகிறது.

*இலவச கட்டாய கல்வி உரிமை சட்டம் 2009. படி ஒரு குடியிருப்பிலிருந்து 1 கீ.மீ தொலைவில் ஒரு தொடக்க பள்ளியும், 3 கீ. மீ. தொலைவில் ஒரு உயர் தொடக்க நிலை பள்ளியும் இருத்தல் வேண்டும். சேலம் மாவட்டத்தில் உள்ள 5790 குடியிருப்பு பகுதிகளில் பள்ளிகள் இல்லா குடியிருப்பு கண்டறியப்பட்டு 2014–15 கல்வி ஆண்டில் 2 புதிய தொடக்க பள்ளியும்,2015–16 கல்வி ஆண்டில் 1 புதிய தொடக்க பள்ளியும், 2016–17 கல்வி ஆண்டில் 1 புதிய தொடக்க பள்ளியை நடுநிலை பள்ளியாகவும் தரம் உயர்த்தப்பட்டது, இதன் மூலம் குழந்தைகள் அருகில் உள்ள பள்ளிக்கு சென்று பயில்வதற்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது.*

## 3. கட்டமைப்பு வசதி (Civil)

*2017–18 கல்வியாண்டில் அரசு தொடக்க / நடுநிலை / உயர் / மேல்நிலைப் பள்ளிகளுக்கு 13 பெண்கள் கழிப்பறைகள், 51 மாணவர் கழிப்பறைகள், 15 மாற்றுத் திறன் கொண்ட மாணவர்களுக்கான கழிப்பறைகள், 1 தரம் உயர்த்தப்பட்ட நடுநிலைப் பள்ளிக்கு தேவையான கட்டிடப் பணிகள் மற்றும் 10 பள்ளிகளுக்கு மராமத்து பணிகள் என மொத்தம் ரூ.271.308 இலட்சத்தில் கட்டிடப் பணிகள் சேலம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

## 4. பள்ளி செல்லா இடைநின்ற குழந்தைகள் (Out of School Children)

*ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நடைபெறும் பள்ளி செல்லா இடைநின்ற குழந்தைகள் வீடுவாரியான கணக்கெடுப்பின் போது 6–14 வயதுடைய பள்ளி செல்லா குழந்தைகள் கண்டறியப்பட்டு சிறப்பு பயிற்சி மையங்கள், உண்டு உறைவிட சிறப்பு பயிற்சி மையங்கள் மற்றும் நேரடி சேர்க்கையின் மூலம் பள்ளியில் சேர்க்கப்படுகின்றனர். இச் செயல்பாட்டின் மூலம் பள்ளி செல்லா குழந்தைகள் எண்ணிக்கை குறைந்துள்ளது.*

***2017–18 ஆம் ஆண்டில் பள்ளி செல்லா குழந்தைகளின் சேர்க்கை விவரம்***

| மாவட்டம் | சிறப்பு பயிற்சி மையம் | உண்டு உறைவிட சிறப்பு பயிற்சி மையம் | கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா உண்டு உறைவிடப் பள்ளி | தேசிய குழந்தை தொழிலாளர் திட்டம் | நேரடி சேர்க்கை | பள்ளி செல்லா குழந்தைகள் | கணக்கெடுப்பில் கண்டறியப்பட்ட மொத்த குழந்தைகள் | 2017–18 ல் பள்ளி மற்றும் சிறப்பு பயிற்சி மையத்தில் பயில்பவர்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| சேலம் | **366** | **251** | **331** | **68** | **387** | **137** | **1540** | **1403** |

## 5. ஆசிரியர் பணியிடைப் பயிற்சி (Training)

*தொடக்க (5136) மற்றும் உயர் தொடக்க நிலை(3615) ஆசிரியர்களுக்கு எளிமைப்படுத்தப்பட்ட செயலவழிக்கற்றல், படைப்பாற்றல் கல்வி முறை, பாடப்பொருள் வலுவூட்டுதல், குழந்தைகளுக்கான கற்றல் அடைவு குறித்த கலந்துரையாடல், பள்ளி சுகாதாரம், கணித உபகரணப்பெட்டி, அறிவியல் உபகரணப்பெட்டி, போட்டி மற்றும் திறனறி தேர்வுகளுக்கு மாணவர்களை தயார் செய்தல், புத்தகப் பூங்கொத்து பயன்பாடு ஆகிய தலைப்புகளில் பயிற்சியானது வழங்கப்படுகிறது. இதனால் மாணவர்களின் அடைவுத்திறன் மேம்பட்டுள்ளது.*

## 6. உள்ளடங்கிய கல்வி (IE)

**6–14** வயது வரை உள்ள பள்ளி செல்லா மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளை ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் சிறப்பாசிரியர்கள் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்களைக் கொண்டு கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டு அம்மாணவர்களின் பாதிப்பு தன்மைக்கேற்றவாறு முறையானப் பள்ளி, பகல் நேர பாதுகாப்பு மையம் மற்றும் வீடு சார்ந்தப் பயிற்சியில் பராமரிக்கப்பட்டு கீழ்கண்ட செயல்பாடுகளின் மூலம் பயனடைகின்றனர்.

| மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளின் எண்ணிக்கை **(6–14)** | பகல் நேர பாதுகாப்பு மையத்தின் எண்ணிக்கை | பகல் நேர பாதுகாப்பு மையத்தின் பயனாளிகளின் எண்ணிக்கை | வீடு சார்ந்த பயிற்சியில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை | போக்குவரத்து செலவினம் | மருத்துவ முகாமில் பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை | உதவி உபகரணங்கள் | தேசிய அடையாள அட்டை | அறுவை சிகிச்சை | உலக மாற்றுத்திறனாளிகள் தினம் | பெற்றோர்களுக்கான பயிற்சி | சிறப்பாசிரியர்களின் எண்ணிக்கை | இயன்முறை நிபுணர்களின் எண்ணிக்கை | பகல் நேர மைய ஊக்குநர்களின் எண்ணிக்கை | பகல் நேர மைய உதவியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6097 | 21 | 319 | 385 | 942 | 2292 | 254 | 655 | 65 | 735 | 2100 | 98 | 22 | 21 | 21 |

7. பள்ளி மானியம் (School Grants)

*பள்ளி மானியமாக அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் 1858 பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த மானியத்தைப் பயன்படுத்தி கற்றல் கற்பித்தலுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்த அன்றாட உபயோகப் பொருட்களுக்கான செலவுகளை மேற்கொள்ளவும், மாணவர்களுக்கு சுகாதாரமான குடிநீர் வசதி செய்தல், மேஜை, நாற்காலி, பீரோ, சுவர் கடிகாரம், அலமாரிகள், எழுது பொருள்கள், மின் விசிறி, மின் விளக்குகள், தகவல் பலகை, கரும்பலகை, செயல் வழிக் கற்றல் அட்டைகள் வைக்கும் டிரேஸ், பாய்கள், தீயணைப்பான், மைக், உயர் தொடக்க மாணவர்களுக்கு தேவையான அறிவியல் ஆய்வக பொருட்கள், உலக உருண்டை, தனிம வரிசை அட்டவணை மற்றும் மாணவர்களுக்கு விளையாட்டின் மீது ஆர்வத்தை ஏற்படுத்த ஏதுவாக கைபந்து, கால்பந்து, ஸ்கிப்பிங் கயிறுகள், சதுரங்க பலகை, கேரம் விளையாட்டு போன்ற பொருட்களை வாங்கி மாணவர்கள் பயன்பாட்டில் உள்ளது.*

*8.* பராமரிப்பு மானியம்(Maintains Grants)

*பள்ளி பராமரிப்பு மானியம் ஆண்டுதோறும் 1738 அனைத்து அரசு பள்ளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இந்த மானியத்தைப் பயன்படுத்தி பள்ளிக் கட்டிடம் , கழிவறை போன்றவற்றை பராமரிப்பதற்காகவும் கழிவறைகளில் தேவையின் பொருட்டு பேசின் பொருத்துதல், கதவு மற்றும் வென்டிலேட்டர், தண்ணீர் வசதிக்கான குழாய்கள், தரை ஓடுகள், செப்டிக் டாங்க் பழுது பார்த்தல் கழிவு நீர் வெளியேறும் குழாய் இணைப்புகள் பழுது பார்த்தல், கழிவு நீர்த் தொட்டி ( Septic tank) சுத்தம் செய்தல் மாணவர்களுக்கு தேவையான குடிநீர் வசதியினை மேம்பாடு செய்து கொடுத்தல், தண்ணீர் வசதிக்கான குழாய்கள், தரைமட்டத் தொட்டி, மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி போன்றவைகளை பழுது பார்த்திடவும் பயன்படுத்தப்படுகிறது.*

9. கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா (KGBV)

சேலம் மாவட்டத்தில் கல்வியில் பின்தங்கிய 12 ஒன்றியங்களில் 13 கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா (KGBV) உண்டு உறைவிட பள்ளிகள் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பள்ளிகளில் பள்ளி செல்லா மற்றும் இடைநின்ற 10 வயது முதல் 14 வயது வரை பெண் குழந்தைகள் 6ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை கல்வி வழங்கப்பட்டு வருகிறது. இம்மாணவிகளுக்கு தரமான கல்வி உணவு, பாதுகாப்பு தொழிற்கல்வி பயிற்சி, கராத்தே போன்ற செயல்பாடுகள் நடைபெறுகிறது. தற்போது 13 KGBV உண்டு உறைவிட பள்ளிகளில் 938 மாணவிகள் பயின்று வருகின்றனர். இப்பள்ளிகளில் HIV பதிக்கப்பட்ட வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள சிறுபான்மை இன மற்றும் துப்பரவு தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது. பள்ளியில் பயின்ற மாணவிகள் தற்போது கடந்த 3 ஆண்டுகளில் 1092 மாணவிகள் 8ஆம் வகுப்பை வெற்றிகரமாக முடித்து மேற்கொண்டு 9ம் வகுப்பு கல்வியை தொடர்ந்து பெற்று வருகின்றனர்.